செய்தி வெளியீடு எண் :- 69.　　　　நாள் 8.07.11

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் அறிக்கை – 8.7.2011**

கிருஷ்ணகிரி மாவட்டம், **கெலவரபள்ளி நீர்த்தேக்கத்திலிருந்து** முதல் போக புன்செய் பாசனத்திற்காக தண்ணீர் திறந்து விடுமாறு வேளாண் பெருமக்களிடமிருந்து எனக்குக் கோரிக்கைகள் வந்துள்ளன. வேளாண் பெருமக்களின் வேண்டுகோளினை ஏற்று, 11 .7.2011 முதல் கெலவரபள்ளி நீர்த்தேக்கத்திலிருந்து, முதல் போக புன்செய் பாசனத்திற்காக **150 நாட்களுக்கு** தண்ணீர் திறந்து விட நான் ஆணையிட்டுள்ளேன். இதனால், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் **8,000 ஏக்கர்** நிலங்கள் பாசன வசதி பெறும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்